1968 ஆகஸ்ட் 21]

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கம்

*77. வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள்: மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிப்பு பொது ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கம் சில ஆண்டுகள் சரிவர இயங்காதது பற்றி அரசுக்கு மனு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிப்பு பொது ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கம் 1—7—1965 முதல் 13—10—1967 வரை செயல் படாமல் இருந்தது. 5—11—1967-ல், அதன் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள், உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய காலங்கடந்த கடன்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்கின்றனர். சங்கம் இப்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிப்புப் பொது ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கம், அந்த நாணயச் சங்கத் தலைவரின் கையாடல் காரணமாகவும், அவர் தவறான முறையில் நடந்து கொண்டதன் காரணமாகவும் தான் சரிவர இயங்கவில்லை. இவ்வாறு தவறான முறையில் நடந்து கொண்ட அந்தத் தலைவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபற்றி விசாரணை செய்து, குழு மாற்றி அமைக்கப்பட்டு, இந்த ஆண்டு கூட ரூ. 50,640 அந்தக் கூட்டுறவு சங்கத்திற்குக் கடன் கொடுத்து, இப்பொழுது சங்கம் ஒழுங்காக நடைபெறுவதாகத் தான் தகவல் இருக்கிறது. அந்தத் தலைவரின்மீது கூறப்பட்ட புகாருக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. எஸ். அக்கினி ராஜு: தலைவர் அவர்களே, முன்பிருந்த அந்தத் தலைவரே மீண்டும், மறுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இப்பொழுதும் அந்தத் தலைவர் மீது பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்பதற்கு பல ஆதாரபூர்வமான தகவல்களை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தக் கடிதம் பற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவு சொஸைட்டியில் 100-க்கு 80 பங்கு சரிவர வேலை செய்யவில்லை. இது சம்பந்தப்பட்ட சொஸைட்டி வேலை செய்யாமல் இருக்கக் காரணம் என்ன—அந்தக் காலக் கெடுவரையில் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதிலே, அவர்கள் மீது கூறி இருக்கக்கூடிய குற்றச்சாட்டுகள், ரசீது பொறுத்தமாகக் கொடுக்கப்படவில்லை ; கௌண்டர்ஃபாயிலுக்கும் கொடுக்கப் பட்டதற்கும் சரிவரவில்லை. லோன் ரெக்கவரி அந்தப் புத்தகத்தில் லெட்ஜரில் குறிப்பிடப்படவில்லை ; சாதாரண வெள்ளைக் காகிதத் தில் ரசீது போட்டு கொடுத்தார் என்ற மூன்று குற்றசாட்டுகள் தான் என்னிடத்திலே இருக்கிறது. அதற்குப் பிறகு விசாரணை செய்து, பிறகு பொது உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி விசாரணை செய்து அதற்குப் பிறகுதான் புதிய நிர்வாக குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒலகடத்துக்கு ஆரம்பச் சுகாதார நிலையம்

*78 வினா.—**திரு. ஏ. எம். ராஜா :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பவானி வட்டத்திலுள்ள, ஒலகடம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் (Primary health centre) வேண்டு மென்று பொதுமக்களிடமிருந்து கடந்த ஆண்டில் கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, ஒலகடம் கிராமத்தைச் சுற்றியுள்ள ஊர்களிலுள்ள மக்களுக்கு வைத்திய வசதி தேவையாக இருந்தால், 10 மைல்களுக்கு அப்பால் வர வேண்டியுள்ளது. ஆகவே, ஒலகடம் கிராமத்தில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே இந்த பிளாக்கில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. இரண் டாவது பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

இராயப்பேட்டை மருத்துவ மனை

*79 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்க இராயப்பேட்டை மருத்துவ மனையை விரிவு படுத்திக் கட்டடம் ஏதேனும் கட்டப்பட்டு வருகிறதா ?